## 5.13 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 2004 – 2005 ஆண்டுக்கு நீட்டித்தல்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட (சந–3) துறை

அரசாணை (நிலை) எண்.262 நாள் : 24.12.2004

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.292 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 04.12.96
2. அரசு ஆணை (நிலை) எண்.132 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் : 18.07.03

மீண்டும் படிக்க :

3. தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நி றுவனம் கடிதம் எண்.794/D1/2004 நாள் 08.04.2004 மற்றும் 03.09.2004.

**ஆணை :**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில், தமிழ்நாட்டில் ரூ.1440.00 கோடி செலவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு றுவனம் மூலமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை (பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்) செயல்படுத்தவும், முதல் கட்டமாக ரூ.2.40 கோடி செலவில் 14 மாவட்டங்களில் 1996–97ம் ஆண்டில் செயல்படுத்திட ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.22.50 கோடி செலவில் 2003–2004ம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நீட்டித்து அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்திட ஆணை வழங்கப்பட்டது,

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் 2004–2005ம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசை வேண்டியுள்ளார்.

4. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத் தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநரது கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்து 2004–2005ம் நிதியாண்டில், பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் தொடரந்து செயல்படுத்திட ரூ.20.00 கோடி (ரூபாய் இருபது கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி, நான்கில் வெளியிடப்பட்ட ஆணை கீழ்கண்ட நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயல்படுத்திட வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

(அ) 2004–2005ம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் ரூ.20.00 கோடியை (ரூபாய் இருபது கோடி மட்டும்) முதல் தவணைத் தொகையாக ரூ.10.00 கோடியும் (ரூபாய் பத்து கோடி மட்டும்) இரண்டாவது தவணையினை டிசம்பர 2004ல் ரூ,5.00 கோடியும் (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) மூன்றாவது தவணையினை ஜனவரி 2005–ல் ரூ,5.00 கோடியும் (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) என்று மூன்று தவணைகளாக விடுவிக்கப்படும். இத்தொகை தொடர்புடைய தன் வைப்பு நிதியில் (P.D. Acount) வரவு வைக்கப்பட வேண்டும்.

(ஆ) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் பொது வைப்பு நிதியில் உள்ள தொகையில் தேவைப்படும் தொகையை விடுவிக்கக் கோரி ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசின் நிதித்துறையை (வழி வகைகள்) (Ways & Means) அணுக வேண்டும்.

(இ) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் தன் வைப்பு நிதியிலிருந்து (P.D. Account) தொகை விடுவிக்க வேண்டும் போது, நிதித்துறை (வழி வகைகள்) செலவினத்தின் நிலைக்கேற்ப தொகையை விடுவிக்கும்.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள ரூ.20.00 கோடியை (ரூபாய் இருபது கோடி மட்டும்) பத்தி ஐந்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறை / நிபந்தனைகளின் அடிப்படையில், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு மூன்று தவணைகள் அடிப்படையில் பெற்று வழங்கிட சமூக நல இயக்குநர், சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேற்கண்ட திட்டம் தொடர்பாக அரசால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட தொகையில்

## 5. MAHALIR THITTAM

செலவிடப்படாமல் மீதமுள்ள தொகைக்கு விவரமான அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை–32 கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேற்கண்ட செலவினம், கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

> “2235–சமூகப் பாதுகாப்பும் நலனும். 02–சமூக நலன். 103–மகளிர் நலன் – பத்தாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள். II – மாநிலத் திட்டம். LC – தமிழ்நாடு மகளிர் முன்னேற்றத் திட்டம். 11 –உதவித் தொகைகள். 02 – பொதுவான உதவித் தொகை (கு.தொ.கு.எண்.2235–02–103–LC–1123)”.

8. மேற்கண்ட தொகை பணமாக வழங்கப்படக்கூடாது. இத்தொகை கீழ்கண்ட தன்வைப்பு நிதிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

> “K” – வைப்புத் தொகைகளும் மற்றும் முன்பணங்களும் (a) – வட்டியில்லாத வைப்புத் தொகைகள். 8443.00 – பொது வைப்புத் தொகைகள். 800 – ஏனைய வைப்புத் தொகைகள் AE – அரசு நிறுவனங்கள் கழகங்கள் ஏனையவற்றின் வைப்புத் தொகைகள் 28 – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக வைப்புத் தொகை (கு.தொகு.எண்.8443–00–800- AE - 280 - D)”.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.70/SS(KR)/SW/04 நாள் : 24.11.2004–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது,

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல். என். விஜயராகவன்**
அரசு செயலாளர்